மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 112/2022

பெயர் : ஜெயஸ்ரீ
சாட்சி – வா.சா–1 நாள்: 03.02.2026

---

**குறுக்கு விசாரணை (1, 2 பிரதிவாதிகள் தரப்பு)**

1. இறந்து போன எனது கணவர் பழனியப்பனின் வாரிசு சான்றிதழ் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பழனியப்பனின் ஆதார் அட்டையை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பழனியப்பனின் பெற்றோர் விவரங்களை நான் எனது வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால் அவர்கள் இறந்துவிட்டார்கள் அதனால் சொல்லவில்லை. பழனியப்பன் பெயரில் என்ன வகையான சொத்துக்கள் உள்ளன என்றால் தோட்டம், காடு ஆகிய அசையா சொத்துக்கள் உள்ளன.

2. பழனியப்பன் பெயரில் உள்ள சொத்து ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1 மற்றும் 2 பிரதிவாதிகள் அரசு அதிகாரிகள் என்பதால் அவர்களுக்கு இந்த வழக்கினை தாக்கல் செய்வதற்கு முன்பாக 2 மாத அறிவிப்பு கொடுத்து இந்த வழக்கு தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN
Digitally signed by V KALIDASAN
Date: 2026.02.03 18:17:22 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பல்லடம்.